## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திருமதி. M.பிரவீணா, M.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

**உத்தமபாளையம்.**

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 3/2020**

(Original Suit CNR No. TNTH06-000-015-2020)

V. முத்து(எ)முத்துகிருஷ்ணன் . . .வாதி

// எதிராக //

1. P.ரமா
2. V. லெட்சுமணன் (Died)
3. சாய்ராம் . . .பிரதிவாதிகள்

-----

இவ்வழக்கு என் முன்பாக 04.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சூர்யநாராயணன் அவர்களும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.பாஸ்கரன் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

### தீர்ப்புரை

தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ மற்றும் ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் தாவா தாக்கல்.

**<u>2. திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u>**

தாவா சொத்தானது அக்ரஹாரம் தெரு, சின்னமனூர் டவுன், தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளதாகவும், வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தையான வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் என்பவரால் 09.05.2019 தேதியில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டதாகவும், ஆதியில் தாவா சொத்தானது வாதியின் தந்தையின் சகோதரர்களான கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி பாத்தியப்பட்டதாகவும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்ட நபர் என்றும், தாவா சொத்தை மேற்படி கிருஷ்ணமூர்த்தியும், ராமச்சந்திரனும் எவ்வித பாகப்பிரிவினையும் இன்றி கூட்டாக அனுபவித்து வந்ததாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதி தரப்பில் மேற்படி ராமச்சந்திரன் 2011ம் வருடத்தில் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் திருமணமாகாமல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி ராமசந்திரனின் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட பேர்பாதி பங்கில் உயிருடன் இருக்கும் அவரது சகோதர்களான வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் மற்றும் கிருஷ்ணமூர்த்திக்கு வாரிசுரிமைப்படி பாத்தியம் என்றும், ராமச்சந்திரன் இறப்பிற்கு பின்னிட்டு வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தையான வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் கூட்டுப்பங்குரிமையர் என்ற உரிமையில் தாவா சொத்தில் 1/4 பங்கு பாத்தியம் என்றும், கிருஷ்ணமூர்த்திக்கு 3/4 பங்கு பாத்தியம் என்றும், அனைவரும் எவ்வித பாகப்பிரிவினையுமின்றி தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதிகள் தரப்பில் தாவா சொத்தில் கிருஷ்ணமூர்த்தி தனக்கு பாத்தியப்பட்ட 3/4 பங்கைப் பொறுத்து 02.03.2011 தேதியில் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமனுக்கு பாகபாத்திய விடுதலை பத்திரமானது ஏற்படுத்தியதில், மேற்படி வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் தாவா சொத்திற்கான சொத்து வரியை அவரது பெயரில் செலுத்தி சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், முதல் பிரதிவாதியானவர் தாவா சொத்தை தவிர்த்து இதர சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கு வாதி, அவரது தந்தை மற்றும் இதர

பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண். 33/2018 ஐ மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம், தேனியில் தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் இருந்து வருவதாகவும், வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் வாதியின் மீதிருந்த அன்பு மற்றும் பாசம் காரணமாக 09.05.2019 தேதியில் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி வைத்ததாகவும், அது முதல் வாதியானவர் எவ்வித இடையூறுமின்றி தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், அவரது தந்தை தாவா சொத்தில் அவருடைய ஆயுட்காலம் வரையோ அல்லது அவர் விரும்பும் வரையோ சுவாதீனத்தில் இருக்க வாய்மொழியாக அனுமதி வழங்கியதில் வாதியின் தந்தை தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதி தரப்பில் தாவா பிரதிவாதிகள் இவ்வழக்கு வாதியின் சகோதர சகோதாரிகள் என்றும், வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் ஆகியோரின் மக்கள் என்றும், தாவா சொத்தில் தாவா பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தின் முழு உரிமையாளர் வாதியே என்றும், கடந்த 18.10.2019 தேதியில் தாவா பிரதிவாதிகள் தாவா சொத்தானது குடும்ப சொத்து என்றும், அதில் தங்களுக்கும் பாகம் உண்டு என்று கூறி வாதியின் தந்தையை தாவா சொத்திலிருந்து வலுக்கட்டயாமாக வெளியேற்றும் பொருட்டு அவரது சுவாதீன அனுபத்தை இடையூறு செய்ய முயற்சி செய்து வந்ததாகவும், மேற்படி முயற்சியானது உற்றார் உறவினர்கள் துணையுடன் தடுக்கப்பட்டதாகவும், இதுகுறித்து தாவா வாதிக்கு தெரியவந்து வாதியானவர் 20.09.2019 தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில் போலீசார் விசாரணை செய்ததில் பிரதிவாதிகள் அவர்களது தந்தையிடம் மன்னிப்பு கேட்டும், தாவா சொத்தில் அவர்களது சுவாதீனத்தை எவ்வித இடையூறும் செய்ய மாட்டோம் என்று உறுதியளித்ததாகவும், பின்னிட்டு இவ்வழக்கு பிரதிவாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கும் பாகபாத்திய உரிமை உள்ளதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு வாதியானவர் 15.01.2020 தேதியில் தகுந்த பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதி தரப்பில் மேற்படி சம்பவத்திற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் ஒரு மாதம் மட்டுமே அமைதியாக இருந்ததாகவும், மீண்டும் 23.12.2019 தேதியில்

பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வந்து வாதிகளின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சித்ததாகவும், இதுகுறித்து வாதியானவர் பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 23.12.2019 தேதியில் சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், சிவில் நீதிமன்றம் மூலம் உரிய பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறிவிட்டதாகவும், பிரதிவாதிகள் கூறுவது போல் தாவா சொத்தானது குடும்ப சொத்து அல்ல என்றும், வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தைக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், அதனால் தான் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய பாகப்பிரிவினை வழக்கில் தாவா சொத்தானது காண்பிக்கப்பட்டு அது குறித்து பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றும், வாதியின் தந்தை வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் 09.05.2019 தேதியில் இவ்வழக்கு வாதிக்கு ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் வாதியே தாவா சொத்தின் உரிமையாளர் என்றும், இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் மூன்றாம் நபர்கள் என்றும், எவ்வித சட்ட உரிமையும் இல்லாமல் தாவா பிரதிவாதிகள் வாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சி செய்து வருவதாகவும், ஆகவே, தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென்று நிரந்தரஉறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தாவா நிலுவையில் இருந்தபோது 2ம் பிரதிவாதியானவர் 06.03.2022 தேதியில் அவரது தந்தை S. வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் என்பவரை வாரிசாக விட்டு காலமாகிவிட்டதாகவும், தாவாவில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால் 2ம் பிரதிவாதியின் வாரிசானவர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே, 2ம் பிரதிவாதியை இவ்வழக்கிலிருந்து நீக்கரவு செய்யும் பொருட்டு இவ்வழக்கு வாதி தரப்பில் 09.08.2024 தேதியில் குறிப்பாணையானது தாக்கல் செய்யப்பட்டு அது இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு இடைமனு எண்.3/2024ல் 29.08.2024ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்அடிப்படையில் வழக்குரையானது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

வாதியானவர் பொய்யான சங்கதிகளைக்கூறி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி வழக்குரையில் கூறியுள்ள பொருண்மைகள் குறித்து இவ்வழக்கின் வாதியே நிருபிக்க கடமைப்பட்டவர் என்றும், அசல் வழக்கு எண். 31/2019 குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்வதாகவும், இவ்வழக்குரை சொத்துகளும், அதனுடன் சேர்ந்த இதர பல சொத்துகளும் இவ்வழக்கு பிரதிவாதிகளின் தாத்தாவான சுப்பிரமணியன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியபட்டதாகும் என்றும், சுப்பிரமணியன் – மீனாட்சி தம்பதியனருக்கு கும்பேஸ்வரன்–1, K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன்–2, கிருஷ்ணமூர்த்தி–3, ராமசந்திரன்–4 என்ற நான்கு ஆண் மக்களும், ராஜாத்தி–5 சரஸ்வதி–6 ஆகிய இரண்டு பெண் மக்களும் சேர்த்து மொத்தம் ஆறு நபர்கள் வாரிசுதாரர்கள் என்றும், அதில் கும்பேஸ்வரன் முன்னதாகவே காலமாகிவிட்டதாகவும், அதன்பின்னிட்டு மேற்படி சுப்ரமணியனுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து காலமான கும்பேஸ்வரன் அவர்களின் வாரிசுதாரர்கள், இவ்வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் வாதியின் தகப்பனாருமான K.S.வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, ராமசந்திரன் ஆகியோர்கள் கடந்த 13.02.1964ம் தேதி ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் மூலம் இவ்வழக்கு சொத்தானது ராமச்சந்திரன் என்பவருக்கு "C" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில் ராமசந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு திருமணம் எதுவும் செய்து கொள்ளாமல் எவ்வித ஆவணமும் எதுவும் எழுதி காலமாகிவிட்டதால், இறந்த இராமச்சந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களானது அவருடைய வாரிசுதாரர்களுக்கு சென்றடைவதை தடுக்கவும், தாவா வழக்குரை சொத்தை K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமனும், கிருஷ்ணமூர்த்தியும் அபகரித்து கொள்ளும்பொருட்டு மோசடியாக சதி செய்து இதர வாரிசுதாரர்களை தவிர்த்து, மேற்படியார்கள் இருவரும் தாவா வழக்குரை சொத்தை அடைந்து கொண்டதாக பொய்யாக பிரபஸ்தாபம் செய்து அதன்மேல் கடந்த 02.03.2011ம் தேதி சின்னமனூர்

சார்பதிவாளர் அலுவலக 1013/2011– ஆவணப்படி கிருஷ்ணமூர்த்தி இவ்வழக்கு வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தை K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமனுக்கு ஒரு பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பது போன்ற ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகவும், மேற்படி பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தினை எழுதிக் கொடுப்பதற்கு கிருஷ்ணமூர்த்திக்கு யாதொரு உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றும், அதேபோல் பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தினை எழுதி பெற்றுக் கொள்ளவும், K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்ட்ராமனுக்கு யாதொரு உரிமையோ, அருகதையோ கிடையாது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதிவாதிகள் தரப்பில், இவ்வழக்கின் பிரதிவாதிகளின் தகப்பனாரான K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன் இவ்வழக்கின் வாதிக்கு கடந்த 09.05.2019 ம் தேதி சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக 2225/2019–ஆவணப்படி இவ்வழக்குரை சொத்தினை தானசெட்டில்மென்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியிருப்பதாக இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்குரிய உரிமைகளை மறைத்து சட்டத்திற்கு விரோதமாக மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகவும், இவ்வழக்குரை சொத்தானது இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு பிறப்பின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற கூட்டுக்குடும்ப சொத்து என்றும், தாவா சொத்தை பொறுத்து இவ்வழக்கின் பிரதிவாதிகள் கூட்டு பங்கு உரிமையாளர்கள் என்றும், தாவா வழக்குரை சொத்தும் இவ்வழக்கின் பிரதிவாதிகளை உள்ளடக்கிய கூட்டுக்குடும்ப பொது சுவாதீனத்தில் வைத்து இது நாள் வரை எவ்வித பாகப்பரிவினை ஏதுமின்றி பொதுவாக வைத்து அனுபவித்து வருவதாகவும், இவ்வழக்கின் வாதி மதுரையிலே தங்கி தொழில் புரிந்து பல வருடங்களாக தாவா வழக்குரை சொத்தில் கூட்டு அனுபவத்திலிருந்து விலகியே இருந்து வருவதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாவா வழக்குரை சொத்தினை பொறுத்து இவ்வழக்கின் வாதியும், அவரது தகப்பானார் K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன் அவர்களும் சேர்ந்து சில மூன்றாம் நபர்களுக்கு வில்லங்கங்களை ஏற்படுத்த முயற்சி செய்த போது, அதனை அறிந்து கொண்ட இவ்வழக்கின் பிரதிவாதிகள் கடந்த அக்டோபர் மாதம் K.S. வெங்கடேஸ்வரன் என்ற

வெங்கட்ராமனிடம் சென்று கேட்டமைக்கு தாவா வழக்குரை சொத்தில் மேற்படி பாகப்பாத்திய விடுதலை மற்றும் இவ்வழக்கின் வாதியின் பெயரில் தானசெட்டில்மெண்ட ஆவணம் ஏற்பட்டுள்ள விபரமானது தெரியவந்ததாகவும், மேற்படி ஆவணங்களானது தாவா வழக்குரை சொத்தை பொறுத்து இவ்வழக்கின் பிரதிவாதிகளுடைய உரிமைகளையோ, பாத்தியத்தையோ, அனுபவத்தையோ எவ்விதத்திலும் கட்டுபடுத்தாததால் அவை செல்லத்தக்கதல்ல என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தாவா வழக்குரை சொத்தினை பொறுத்து K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் இவ்வழக்கின் வாதி ஆகியோர்கள் சேர்ந்து ஏற்படுத்தி கொண்டிருக்கும் வில்லங்களை தெரிந்து கொண்ட இவ்வழக்கின் பிரதிவாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலமாக இவ்வழக்கின் வாதி மற்றும் அவர்களுடைய தகப்பானாரான K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன் ஆகியோர்களுக்கு 14.12.2019 ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பி தாவா சொத்தினை பொறுத்து மேற்படி நபர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வில்லங்கங்களை உரிய முறையில் ரத்து செய்ய வேண்டுமென்றும், மேலும் வில்லங்க விவகாரங்களில் ஈடுபடக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்திருந்ததாகவும், அதனை இவ்வழக்கின் வாதி பெற்றுக்கொள்ளமாலேயே திருப்ப அனுப்பி விட்டு கடந்த 11.01.2020 ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியதாக பொய்யுரைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இத்தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் இவ்வழக்கின் வாதிக்கு அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்டு அதன்பின்னிட்டு கடந்த 26.12.2019 ம் தேதி இவ்வழக்கின் பிரதிவாதிகள் இவ்வழக்கின் வாதியின் தகப்பானாரான K.S. வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமனை மிரட்டுவதாக ஒரு பொய் புகாரினை சின்னமனூர் காவல் நிலையத்தில் வழங்கியதாகவும், உண்மையில் அவ்வாறான சம்பவம் எதுவும் நடைபெற்றிருந்தால், நடந்ததாக சொல்லப்படும் 23.12.2019 ம் தேதியிலேயே புகாரினை சமர்ப்பித்து இருப்பார்கள் என்றும் , ஏனென்றால் அன்றைய தேதியில் இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி பெங்களூரில் அவரது பேத்தியின்

பிறந்தநாள் விழாவிற்காக சென்றுவிட்டதாகவும், இவ்வழக்கின் 2–ம் பிரதிவாதியும் சுருளி அருவிக்கு சென்றுவிட்டதாகவும், இவ்வழக்கின் வாதியும் அவரது தகப்பானரும் சேர்ந்து வழக்குரை சொத்தினை மோசடியாக அபகரிக்கும் நோக்கத்துடன், தாவா வழக்குரை சொத்திலிருந்து இவ்வழக்கு பிரதிவாதிகளை சட்டத்திற்கு விரோதமாக வெளியேற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இதுபோன்ற புகாரினை பின் யோசனையுடன் எண்ணத்தில் கொடுத்துள்ளதாகவும், மேற்படி விவரம் குறித்து இவ்வழக்கின் பிரதிவாதிகள் சின்னமனூர் காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகி தெரிவித்தின்பேரில் காவல்துறை அதிகாரிகளும் இவ்வழக்கின் வாதியை எச்சரித்து அனுப்பியுள்ளதாகவும், ஆனால் மேற்படி உண்மை விபரத்தினை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்குரை சொத்துகளின் உரிமை மூலமும், சுவாதீனமும் இவ்வழக்கின் பிரதிவாதிகளை உள்ளடக்கிய கூட்டுக் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய வாரிசுதாரர்களுக்கே உள்ள நிலையில், இவ்வழக்குரை சொத்தின் சுவாதீனமானது இவ்வழக்கின் வாதிக்கு மட்டும் இருந்து வருகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், இவ்வழக்குரை சொத்தின் சுவாதீனம் ஒருபோதும் இவ்வழக்கின் வாதி வசம் இருந்ததில்லை என்றும், அதற்கான அவசியமும் ஒருபோதும் ஏற்பட்டதுமில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கின் வாதிக்கு தாவா வழக்குரை சொத்தைப் பொறுத்து எவ்வித உரிமை மூலம் எதுவும் இல்லாத நிலையில் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டு அதன்மேல் உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்குரையானது நீதிமன்ற கோப்பிற்கு எடுத்து கொள்ளவோ, தகுதியின்பால் தீர்வுகாண வேண்டிய வழக்குரையல்ல என்றும், அதனால் இவ்வழக்கின் வாதி இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு அதிகபட்ச செலவு தொகையினை செலுத்திட உத்தரவு பிறப்பித்து இவ்வழக்குரையினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், இவ்வழக்கின் வாதி உண்மை விபரங்களை மறைத்து, தவறான விபரங்களை முன்னிட்டு தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, இவ்வழக்கின் தீர்விற்காக 14.02.2022 அன்று கீழ்காணும் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எழுவினா 1 | Whether the plaintiff is having exclusive possession over the suit property? |
| எழுவினா 2 | Whether the plaintiff is entitled to get the relief of permanent injunction as prayed for? |
| எழுவினா 3 | To what other relief, the parties are entitled to? |

5. வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதியானவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 சான்றாவணமானது குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டும் நீதியின் நலன் கருதியும் தாவா எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஆனது ஒரு சேர இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

| | |
|---|---|
| எழுவினா 1 | Whether the plaintiff is having exclusive possession over the suit property? |
| எழுவினா 2 | Whether the plaintiff is entitled to get the relief of permanent injunction as prayed for? |

7. **வாதி தரப்பு வாதம் யாதெனில்**, 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி தாவா சொத்தானது வாதியின் தந்தையின் சகோதரர்களான கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்ட நபர் என்றும், மேற்படி ராமச்சந்திரன் தாவா சொத்து குறித்து எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் திருமணம் ஆகாமல் வாரிசு

எதுவுமின்றி கடந்த 2011ம் வருடத்தில் காலமாகிவிட்டதாகவும், ராமசந்திரனுக்கு பாத்தியப்பட்ட பேர்பாதி சொத்திற்கு 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், தாவா சொத்தில் கிருஷ்ணமூர்த்தி தனக்கு பாத்தியப்பட்ட 3/4 பங்கைப் பொறுத்து 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமனுக்கு கடந்த 02.03.2011 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலைப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் தாவா சொத்தின் முழு உரிமையாளராக அனுபவித்து வந்த நிலையில் தாவா சொத்து குறித்து இவ்வழக்கு வாதிக்கு 09.05.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், தாவா சொத்தில் வாதியானவர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், தாவா வாதியின் அனுமதியின் பேரில் அவரது தந்தை தாவா சொத்தில் வசித்து வருவதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் தங்களுக்கும் உரிமை உண்டு என்று கடந்த 18.10.2019 மற்றும் 23.12.2019 தேதிகளில் தாவா சொத்தில் வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்ய முயன்றதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், ஆகவே, தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டது.

8. **பிரதிவாதிகள் தரப்பு வாதம் யாதெனில்,** தாவா சொத்தானது பிரதிவாதிகளின் தாத்தா சுப்ரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தானது பூர்வீகச்சொத்து என்றும், பிறப்பின் அடிப்படையில் தாவா சொத்தில் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கும் உரிமையுண்டு என்றும், மேற்படி பிரதிவாதிகளின் தாத்தா சுப்பிரமணியத்திற்கு நான்கு ஆண்மக்கள் மற்றும் இரண்டு பெண் மக்கள் என்றும், சுப்ரமணியனின் ஆண் மக்கள் 13.12.1964 தேதியில் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்தில் பேர்பாதி ராமச்சந்திரன் என்பவருக்கு C அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ராமச்சந்திரன் திருமணம் ஆகாமல் வாரிசுகள் எதுவுமின்றி விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி சொத்தை 1ம் வாதியின் தந்தையும், கிருஷ்ணமூர்த்தியும் சதிசெய்து மோசடியாக இதர வாரிசுதாரர்களை விட்டு தாவா

சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக கூறியும், கிருஷ்ணமூர்த்தி 02.03.2011 தேதியில் தமக்கு தாவா சொத்தில் 3/4 பங்கு பாத்தியப்பட்டதாக கூறி, 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமனுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் வாதியின் தந்தை இவ்வழக்கு வாதிக்கு 09.05.2019 தேதியில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்றும், இவ்வழக்கு பிரதிவாதிகள் கூட்டு பங்குரிமையாளர்கள் என்றும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்குள்ள உரிமையை மறுத்து வாதி பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரமானது ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேற்படி பத்திரமானது தாவா சொத்தில் பிரதிவாதிகளுடைய உரிமையையோ, பாத்தியத்தையோ, அனுபவத்தையோ பாதிக்காது என்றும், வாதிக்கு தாவா வழக்குரை சொத்தைப் பொறுத்து எவ்வித உரிமைமூலம் எதுவும் இல்லாத நிலையில் மோசடி ஆவணங்களை ஏற்படுத்தி அதனடிப்படையில் தாவா சொத்து குறித்து நிரந்தஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9) இவ்வழக்கில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரமானது வா.சா.ஆ.1 ஆகவும், 02.03.2011 தேதியிட்ட வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் பெயரிலான பாகபாத்திய விடுதலை பத்திரமானது வா.சா.ஆ.2 ஆகவும், 09.05.2019 தேதியிட்ட இவ்வழக்கு வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரமானது வா.சா.ஆ.3 ஆகவும், வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் பெயரிலான குடிநீர்கட்டண ரசீது வா.சா.ஆ.4 ஆகவும், 20.10.2019 தேதியிட்ட மனு ரசீது வா.சா.ஆ.5 ஆகவும், 16.02.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பானது வா.சா.ஆ.6 ஆகவும், 11.01.2020 தேதியிட்ட பதிலறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், இவ்வழக்கு வாதியால் 26.12.2019 தேதியில் சின்னமனூர் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகாரின் நகலானது வா.சா.ஆ.8 ஆகவும், 27.12.2019 தேதியிட்ட மனு ரசீதானது வா.சா.ஆ.9 ஆகவும், இவ்வழக்கு வாதியின் தந்தை பெயரிலான குடிநீர் கட்டண ரசீது வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 3 ம் பிரதிவாதியானவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 15.06.2023 தேதியிட்ட மணிமாறன் என்பவர் பெயரிலான கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலானது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) **இவ்வழக்கில் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்படும் பொருண்மைகள் யாதெனில்,** தாவா சொத்தானது வாதியின் பாட்டனாரான சுப்ரமணியன் என்பருக்கு பாத்தியப்பட்டது குறித்தும், மேற்படி சுப்ரமணியத்திற்கு கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன், ராமச்சந்திரன், கும்பேஸ்வரன், ராஜாத்தி, சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுகள் என்பது குறித்தும், மேற்படி கும்பேஸ்வரன் முன்னதாகவே காலமாகிவிட்டது குறித்தும், சுப்ரமணியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து அவரது இதர ஆண் வாரிசுதாரர்களான கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் மற்றும் இறந்துபோன கும்பேஸ்வரனின் வாரிசுகள் 13.02.1964 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்திக் கொண்டது குறித்தும், அதில் B அட்டவணை சொத்தானது கிருஷ்ணமூர்த்திக்கும், C அட்டவணை சொத்தானது இராமசந்திரன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது குறித்தும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு திருமணம் ஆகாமல் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் காலமாகிவிட்டது குறித்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 58–ன் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளானது நிரூபிக்கப்படவேண்டிய அவசியமில்லை.

11) **இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய பொருண்மைகள் யாதெனில்,** தாவாச்சொத்தானது பூர்வீகச்சொத்து என்றும், பிறப்பின் அடிப்படையில் அச்சொத்தில் பிரதிவாதிகளுக்கும் உரிமை உள்ளது என்றும், ராமச்சந்திரனின் இதர வாரிசுகளை தவிர்த்து அவருக்குப்பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது சகோதரர்களான 1 ம்வாதியின் தந்தை மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் தங்களுக்குப்பாத்தியப்பட்டதாக கூறி 02.03.2011–ம் தேதியில் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் 09.05.2019–ம் தேதியில் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், மேற்படி பத்திரங்களானது தாவாச்சொத்தில் பிரதிவாதிகளுக்குள்ள உரிமைகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று எடுத்துரைத்துள்ள நிலையில், வாதியானவர் தாவாச்சொத்து குறித்து கோரும்

நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காணவேண்டியது அவசியமாகிறது.

12) வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட 13.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தினை பரிசீலனை செய்யும்போது லேட்.சுப்பிரமணியத்தின் ஆண் வாரிசுகள் மட்டுமே அப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டுள்ளதும், அதில் கண்ட A அட்டவணைச் சொத்தானது வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் என்பவருக்கும், B அட்டவணை சொத்தானது கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கும், C அட்டவணை சொத்தானது இராமச்சந்திரன் என்பவருக்கும், D அட்டவணை சொத்தானது லேட்.கும்பேஸ்வரனின் வாரிசுதாரர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. வா.சா.1–ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் B மற்றும் C அட்டவணைச்சொத்தில் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் தலா பேர்பாதி பாத்தியமாக காண்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "வழக்குச்சொத்து 13.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன் ஆகியோருக்கு C செடியூல் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்திக்கு B செடியூல் சொத்தும், ராமச்சந்திரனுக்கு C செடியூல் சொத்தும் ஒதுக்கப்பட்டது. இதன் மேலே நான் சொல்லிய B மற்றும் C செடியூல் சொத்துக்கள் சேர்ந்துதான் வழக்குச்சொத்துக்கள் என்றால் சரிதான்..." என்று சாட்சியம் அளித்துள்ளார். வழக்குரை சொத்து விபரத்தினை பரிசீலனை செய்யும்போது வா.சா.ஆ 1 ல் கண்ட B மற்றும் C அட்டவணை சொத்துக்கள் தான் தாவா சொத்து என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13) மேலும், 2011 ம் வருடம் ராமச்சந்திரன் திருமணமாகாமல் வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டதாக இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ராமச்சந்திரனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழானது இரு தரப்பிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், இருதரப்பிலும் ராமச்சந்திரனின் இறப்பு குறித்து எடுத்துரைக்கப்படும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேற்படி ராமச்சந்திரன் வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டநிலையில்,

மேற்படியாருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் இந்து வாரிசுமை சட்டம் பிரிவு 8 குறித்த அட்டவணை II–ல் அவருடன் பிறந்த உயிருடன் இருக்கும் சகோதர, சகோதரிகளே வாரிசாக வருவர். மேற்படி ராமச்சந்திரன் இறப்பின் போது அவரது சகோதரிகள் உயிருடன் இருந்தார்களா என்பது குறித்து இரு தரப்பிலும் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

14) வா.சா.ஆ 1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் ராமச்சந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட C அட்டவணை சொத்தில் அவரது சகோதரர்களான கிருஷ்ணமூர்த்தியும், வெங்கடேஷ்வரன் என்பவரும் தங்களுக்கு பேர்பாதி பாத்தியம் உள்ளதாகக்கூறி, கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரனின் வாரிசு என்ற முறையில் கிடைத்த பாகம் மற்றும் வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் கிடைத்த B அட்டவணை சொத்தினைப்பொறுத்தும் தாவாச்சொத்தில் மேற்படி கிருஷ்ணமூர்த்தி தமக்குரிய 3/4 பாகத்தினை இவ்வழக்கு வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.2–ஆன 02.03.2011 ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரமானது ஏற்படுத்தியுள்ளதும், மேற்படி வெங்கடேஷ்வரன் தாவாச்சொத்தினை முழுஉரிமையாளர் என்ற முறையில் இவ்வழக்கின் வாதிக்கு தாவாச்சொத்து குறித்து 09.05.2019–ம் தேதியில் வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் தானசெட்டில்மெண்ட் பத்திரமானது ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணங்களை பொய்ப்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

15) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது தங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்று எடுத்துரைக்கப்படும் நிலையில், தங்களுக்கும் அதில் பிறப்பின் அடிப்படையில் உரிமையுள்ளதாக கூறும் நிலையில், தாவா சொத்தானது 3 தலைமுறைகளுக்கும் மேற்பட்டு பாகப்பிரிவினையின்றி கூட்டுக்குடும்ப சொத்தாக பிரிபடாமல் அனுபவிக்கப்பட்டு வந்ததாக எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், தாவா சொத்தானது கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. இது குறித்து பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "வழக்குச்சொத்தில் நாங்கள் கூட்டாக அனுபவத்தில் இருந்துவருவதாக கூறுவதை

நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ராமச்சந்திரன் சொத்துக்கள் தற்போதுவரை பாகம் பிரிக்கப்படவில்லை என்பதாலும், அது கூட்டுச்சொத்தாக உள்ளதால், எங்களால் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக கூறுவது குறித்து ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை. ராமச்சந்திரன் சொத்தில் நாங்கள் வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் உரிமையிருப்பதாக இந்த வழக்கில், எதிர்வாதம் புரிந்துவருகிறோம் என்றால் ராமச்சந்திரன் சொத்தில் அனைத்து வாரிசுகளுக்கும் உரிமையிருப்பதாக எதிர்வாதம் புரிந்து வருகிறோம். வழக்குச்சொத்தினைப்பொறுத்து நாங்கள் பாகப்பிரிவினை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தற்போதுதான் இச்சொத்து தொடர்பாக தெரியவந்தது" என்று சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1 சாட்சியின் குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து தாவா சொத்தானது பூர்வீக சொத்து என்பது குறித்தும், அதில் பிரதிவாதிகளுக்குள்ள உரிமை குறித்தும், பாகப்பாத்தியம் குறித்தும் ஆவணங்கள் எதுவும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது.

16) மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியானவர் தாவாச்சொத்தினை தவிர்த்து இதர சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கின் வாதி, அவரது தந்தை மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம், தேனியில் அசல்வழக்கு எண்.33/2018 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், தாவாச்சொத்திற்கு வெங்கடேஷ்வரன் முழுஉரிமையாளர் என்பதால் தான் இச்சொத்தானது அசல்வழக்கு எண். 33/2018ல் தாவாச்சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் இருதரப்பிலும் அசல்வழக்கு எண்.33/2018–ன் வழக்குரையானது இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " 13.02.1964ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது தந்தைக்கு 1பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது மாண்புமிகு தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் எனது அக்கா பாகப்பிரிவினை வழக்கு ஒன்று அசல் வழக்கு எண்.33/2019 என்ற வழக்கினை தாக்கல் செய்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான்... மேற்படி தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பான அசல்வழக்கு எண்33/2019 என்ற வழக்கில் வழக்குச்சொத்தாக இந்த வழக்கு சொத்தாக

குறிப்பிடவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்திலிருந்து அசல்வழக்கு எண்.33/2018−ல் இவ்வழக்கு சொத்தானது, அவ்வழக்கு தாவாச்சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது பூர்வீக சொத்து என்று எடுத்துரைக்கப்படும் நிலையில், அசல் வழக்கு எண். 33/2018 ல் தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்படாததற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

17) மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் Bachan Singh Vs Swaran Singh (2000) 3 SCC 719 என்ற முன்தீர்ப்புரையானது எழுத்து பூர்வமான வாதத்தில் கோடிட்டு காட்டப்பட்டு அதில் " Co−owner is not entitled to seek an injunction against another co−owner unless an active ouster or material destruction of the joint property is proved" என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், ஆகவே தாவா பிரதிவாதிகள் கூட்டு பங்குரிமையாளர்கள் என்பதால் தாவா சொத்துக்குறித்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது இவ்வழக்கு வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டது. 13.02.1964 ம் தேதியிலேயே வா.சா.ஆ 1 ஆன பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்பட்டுள்ள நிலையில், ராமச்சந்திரனுக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில், 2 ம் நிலை வாரிசான ராமச்சந்திரனின் சகோதரரான வெங்கடேஷ்வரன் உயிருடன் உள்ள நிலையில், வெங்கடேஷ்வரின் வாரிசுகளான இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாகபாத்திய உரிமை உள்ளதாக எடுத்துரைக்கும் வாதமானது ஏற்கத்தக்கதல்ல. இவ்வாறான சூழ்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி முன்தீர்ப்புரையானது இவ்வழக்கின் தன்மைக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கு வாதியானவர் தாவா சொத்தானது வா.சா.ஆ 3 ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் அவருக்கு பாத்தியப்பட்டதாக எடுத்துரைத்து, தாவா சொத்து குறித்த வரி ரசீதுகளானது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து பொய்ப்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

18) மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 ஆன புகார் மனு

ரசீது, வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆன வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு, வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆன புகார் மனு மற்றும் புகாருக்கான மனு ரசீதுகளை பரிசீலனை செய்யும் போது தாவா சொத்து குறித்து தாவா தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை உள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் Anathula Sudhakar v.P. Buchi Reddy (2008) 4 SCC 594 என்ற வழக்கில் "where there is a clear dispute regarding title, or where the plaintiffs title is under a cloud, a suit simpliciter for injuction is not maintainable: the plaintiff must necessarily sue for a declaration of title and consequential reliefs." என்று விளக்கப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தில் வாதியின் உரிமை மூலத்திற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதால், தாவா சொத்து குறித்து வாதி விளம்புகை பரிகாரம் கோராததால் தாவாவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டதாக எடுத்துரைத்து வா.சா.ஆ 3 ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்துள்ள நிலையில், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்குள்ள உரிமை குறித்து நிரூபிக்கப்படாத நிலையில், மேற்படி முன்தீர்ப்புரையானது இவ்வழக்கின் தன்மைக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 ஆன 02.03.2011 தேதியிட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் வா.சா.ஆ.3 ஆன 09.05.2019 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரங்களானது தாவா சொத்தில் தங்களுக்குரிய பாகபாத்தியத்தையோ, உரிமையையோ, அனுபவ பாத்தியத்தையோ கட்டுப்படுத்தாது என்று எடுத்துரைத்துள்ள நிலையில், அப்பத்திரங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி தனியொரு வழக்கோ அல்லது இவ்வழக்கில் எதிரிடை பரிகாரம் கோரப்படாதற்க்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வா.சா.1 சாட்சியானவர் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படினும், மேற்படி குறுக்கு விசாரணையின் சாட்சியமானது வாதி தரப்பு வழக்கை பொய்ப்பிக்கும் வகையில் இல்லை.

20) மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா நிலுவையில்

உள்ளபோது தாவா சொத்தின் ஒரு பகுதி குறித்து இவ்வழக்கு வாதியானவர் பி.சா.ஆ.1ன் படி 15.06.2023 தேதியில் மணிமாறன் என்பவர் பெயரில் கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி கிரைய பத்திரமானது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 171/2023 ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி பி.சா.ஆ.1 ஆன 15.06.2023 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை மறைத்து வழக்காடி வருவதால் தாவா சொத்து குறித்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது கிடைக்கத்தக்கதல்ல என்று எடுத்துரைக்கப்பட்டு, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் S.P.Chengalvaraya Naidu Vs Jagannath (1994 ) 1 SCC 1 ல் " Fraud avoids all Judicial acts. A litigant who suppresses a material fact before the court is guilt playing fraud on the court and must be thrown out at any stage" என்றும், Jharkhand State Housing Board Vs Didar Singh (2019) 17 SCC 692 ல் " The suit for bare injunction can not be maintained when the plaintiff fails to prove continuous, actual physical possession over the entire property on the date adjudication" என்று விளக்கப்பட்டுள்ளதாகவும் வாதிடப்பட்டது.

21) பி.சா.ஆ.1 ஆன 15.06.2023 தேதியிட்ட கிரைய பத்திரத்தினை பரிசீலனை செய்யும் போது இவ்வழக்கு வாதியானவர் தாவா சொத்தின் ஒரு பகுதியை மணிமாறன் என்பவருக்கு தாவா நிலுவையில் உள்ளபோது கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. இது குறித்து வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் "15.06.2023 அன்று நான் மணிமாறன் என்பவருக்கு வழக்கு சொத்தில் 1 பகுதி சொத்தினை கிரையம் கொடுத்துள்ளேன் என்றாலும், அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் என் முன் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கை வாதியானவர் தொடர்ந்து நடத்தி வரும் நிலையில், வாதியால் பி.சா.ஆ1 ஆனது ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், பி.சா.ஆ1 ஆவணம் குறித்து இவ்வழக்கு வாதிக்கு நன்கு தெரிந்தும், வாதியிடமிருந்து கிரையம் பெற்ற மேற்படி மணிமாறனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததற்கு வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

22) தாவா வழக்குரையை பரிசீலனை செய்யும்போது இவ்வழக்கு வாதியானவர் தாவா சொத்தில் முழுமையான சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக

எடுத்துரைத்து, அதன் அடிப்படையில் இவ்வழக்கு வாதியானவர் தாவா சொத்தில் முழுமையான சுவாதீனத்தில் இருந்து வருகிறாரா? என்பது குறித்து எழுவினாவும் வனையப்பட்டுள்ளது. மேலும், வாதியானவர் தாவா சொத்து விபரத்தில் மேற்படி மணிமாறனுக்கு பி.சா.ஆ1 ன் மூலம் விற்பனை செய்யப்பட்ட சொத்து போக மீதமுள்ள சொத்துக்களில் சுவாதீனத்தில் இருப்பதாக வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பி.சா.ஆ1 ல் கண்டுள்ள சொத்திற்கு வாதியானவர் தற்போது உரிமையாளர் இல்லை. மேலும் வாதியானவர் தான செட்டில்மெண்ட் பத்திரப்படி தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தின் ஒரு பகுதியை பி.சா.ஆ1ன் மூலம் விற்பனை செய்துள்ள நிலையில், தாவா முழு சொத்திற்கும் நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரமானது கோருகிறார்.

23) இவ்வழக்கு வாதியானவர் பி.சா.ஆ1ன் மூலம் விற்பனை செய்யப்பட்ட சொத்து போக அவரது சுவாதீனத்தில் எவ்வளவு உள்ளதோ அதற்கு மட்டுமே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியுமே தவிர தாவா முழு சொத்திற்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது. மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து தாவா தாக்கல் செய்த தேதியில் வாதியானவர் தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருப்பது தெரியவந்தாலும், தாவா நிலுவையில் உள்ள போது பி.சா.ஆ.1ன் மூலம் தாவா சொத்தின் ஒரு பகுதியை வாதியானவர் விற்பனை செய்துள்ள நிலையில், மீதமுள்ள சொத்தில் வாதியின் சுவாதீனம் குறித்து வாதி தரப்பில் அடையாளப்படுத்தப்படாத காரணத்தினாலும், பிரதிவாதிகள் தரப்பில் இது குறித்து எடுத்துரைக்கப்படும் முன் தீர்ப்புரையானது இவ்வழக்கில் தன்மைக்கு பொருந்துவதாக உள்ளதாலும், தாவா சொத்து குறித்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, தாவா எழுவினாகள் 1 மற்றும் 2ஐ வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

| | |
|---|---|
| எழுவினா 3 | To what other reliefs, the parties are entitled to? |

24) இவ்வழக்கில் எழுவினாக்கள் 1 மற்றும் 2ன்படி விரிவான காரணங்களின் அடிப்படையில் தாவா சொத்து குறித்து வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது அவருக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் தீர்வு கண்டுள்ளபடியால், வாதிக்கு

வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, தாவா எழுவினா 3 க்கு தீர்வு காண்கிறது.

25) <u>**முடிவாக,**</u>

தாவா தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.07.20 18:26:57 +0300

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்**</u>

| | |
|---|---|
| வா.சா.1 | முத்து(எ)முத்துகிருஷ்ணன் |

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 13.02.1964 | பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | 02.03.2011 | பாகபாத்திய விடுதலை பத்திரம் ஆவண எண். 1013/2011 – சான்றிட்ட நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 09.05.2019 | தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண். 2225/2019– சான்றிட்ட நகல் |
| 4 | வா.சா.ஆ.4 | 23.04.2019<br>09.05.2019 | தாவா சொத்திற்குரிய வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள ரசீதுகள் – அசல் (எண்ணிக்கைகள்–2) |
| 5 | வா.சா.ஆ.5 | 20.10.2019 | சின்னமனூர் காவல் நிலைய புகார் மனு ரசீது – அசல் |
| 6 | வா.சா.ஆ.6 | 14.12.2019 | வழக்கறிஞர் அறிவிப்பு – சார்பு நகல் |
| 7 | வா.சா.ஆ.7 | 11.01.2020 | வாதியின் பதிலறிவிப்பு – அலுவலக நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | 26.12.2019 | வாதி சின்னமனூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் |

| | | | |
|---|---|---|---|
| | | | மனு – நகல் |
| 9 | வா.சா.ஆ.9 | 27.12.2019 | சின்னமனூர் காவல் நிலையத்தில் வழங்கிய புகாருக்கான மனு ரசீது |
| 10 | வா.சா.ஆ.10 | 11.01.2016 | தாவா சொத்திற்குரிய தண்ணீர் கட்டண ரசீது – அசல் (எண்ணிக்கைகள் –2) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

| | |
|---|---|
| பி.சா.1 | சாய்ராம் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1 | 15.06.2023 | மணிமாறன் என்பவர் பெயரிலான கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.07.20 18:27:04 +0300

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.